செ.வெ.எண்: 42/2021 நாள்: 18.08.2021

**காணொளி காட்சி மூலம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!**

திருப்பூர் மாவட்டத்தில் கொரானா தடுப்பு நடவடிக்கை எதிரொலியாக, தேசிய தகவலியல் மைய தொழில்நுட்ப உதவியுடன் வருகிற **24.08.2021 செவ்வாய் அன்று** காலை 10.30 மணி முதல் காணொளி காட்சி மூலம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறவுள்ளது. அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குனர், வேளாண் விரிவாக்க மைய அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அரங்கில் இருந்து விவசாயிகள் காணொளி காட்சி மூலம் மாவட்ட ஆட்சியரை அணுகி விவசாயம் தொடர்பான குறைகளை தெரிவித்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், விவசாயிகள் நுண்ணீர் பாசனம் அமைத்திட விவசாயிகளுக்கு ஏதுவாக அந்தந்த வட்டாரங்களில், வேளாண்மை அலுவலர், தோட்டக்கலை அலுவலர் மற்றும் வேளாண் பொறியியல் துறை அலவலர்களைக் கொண்டு வேளாண் உதவி மையம் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண் உதவி மையத்தின் மூலம் விவசாயிகள் நுண்ணீர் பாசனம் அமைக்க தேவையான தகவல்கள் வழங்கப்படும். தக்க ஆவணங்களுடன் வரும் விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன மேலாண்மை தகவல் அமைப்பில் (MIMIS PORTAL) பதிவு செய்து விவசாயிகள் பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்,**